[1982 மார்ச் 2

(முற்பகல் 9-10)

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களை, நான் ஏற்கனவே சொன்னதைப் போல, துவக்கத்தில் சில பொருள்களைச் செய்யலாம் என்று ஆரம்பிக்கிறோம். பிறகு வாங்குவோரின் உணர்வுகள் மாறுகின்றன. ஆகவே, அங்கே இருக்கும் நிலைமைகளை அனுசரித்து, அந்த நிறுவனம் நஷ்டத்தில் விழாமல் இருக்கவும், வாடிக்கையாளர்களுக்குத் தரமான பொருள்களை நியாயமான விலையில் தருவதற்கும் அங்கே சில மாற்றங்களைச் செய்கிறோம். அந்த வகையில் தான் பழனியில் முதலில் அரிக்கேன் விளக்கு தயாரிக்கப்பட்டது. தற்போது அங்கே ''பேப்ரிகேஷன்'' செய்யப்படுகிறது. டான்சியைப் பொறுத்த வரையில் 56 நிறுவனங்கள் இருக்கின்றன. அந்த 56 நிறுவனங்களைப் பொறுத்த வரையிலும் அவ்வப்போது இப்படிப்பட்ட ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, எங்கெங்கே இப்படிப்பட்ட மாற்றம் செய்ய வேண்டும் என்கிற அவசியம் ஏற்படுகிறதோ அங்கெங்கெல்லாம் உள்ள நிலைமைகளுக்கு ஏற்ப மாற்றங்களைச் செய்து கொண்டு வருகிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழக வனங்களில் 'சூபாபுல்' மரங்களை வளர்க்கும் திட்டம்.

*வினா எண். 305—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன், திரு. செ.செம்மலை—மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்திலுள்ள வனங்களில் அதிக அளவில் ''சூபாபுல்'' மரங்களை பயிரிடும் செயற் குறிப்பு அரசிடம் உண்டா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : ஆம். இது குறித்து விவர அறிக்கை@ ஒன்று அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : பேரவைத் தலைவர் அவர்களே, ''பார்ம் பாரஸ்ட்'' திட்டத்தின் கீழ் தமிழகத்தில் உள்ள எல்லா கிராமப் புறங்களிலும் உள்ள ஓடைகள், குளங்கள் ஆகிய இடங்களில் சாலி, கருவேலம், சாத்து மரம் போன்ற மரங்கள் வனத்துறை அதிகாரிகளால் வளர்க்கப்பட்டு வருகின்றன. அவை பலன் தருவதற்கு 20 ஆண்டுகள் ஆகின்றன. ஆகவே, கிராமங்களில் உள்ள மேய்ச்சல் நிலங்களில், ஆற்றுப் படுகைகளில், கால்நடைகளுக்குத் தீவனமாகவும்,

@427-ம் பக்கத்தில் இணைப்பாக அச்சிடப்பெற்றுள்ளது.

1982 மார்ச் 2]

இரண்டு ஆண்டுகளில் பலன் கொடுக்கக் கூடியதுமான இந்த ''சுபா புல்'' மரங்களை அதிக அளவில் பயிரிட வனத்துறை நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, ''பார்ம் பாரஸ்டிரி'' என்றும், 'சோசியல் பாரஸ்டிரி'' என்றும் அழைக்கப்பட்ட திட்டங்கள் இப்போது ஒன்றாக இணைக்கப்பட்டு ''சோசியல் பாரஸ்டிரி'' என்ற பெயரால் 10 ஆண்டுக் காலத் திட்டம் உருவாக்கப்பட்டு, ஸ்வீடன் நாட்டு உதவியோடு மிகப் பெரிய அளவிலே அந்தத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. இந்தத் திட்டத்தின் கீழ் தான் இந்த ''சுபா புல்'' என்கிற விசேஷமான மரத்தையும் வளர்ப்பதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இப்போது பரிட்சார்த்தமாக—இந்த விடையில் தெரிவித்து இருப்பது போல்—105 எக்டேர் சமதள நிலங்களில் பயிரிடப்பட்டு இருக்கிறது. இதனுடைய தொடர்ந்து பலன் அளிக்கக் கூடிய நிலைமைகளை தெரிந்து கொண்ட பிறகு மிகப் பெரிய அளவிலே—சமூக நலக் காடுகள் வளர்ப்புத் திட்டத்தின் மூலம்—இதைச் செய்ய இயலும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவரக் குறிப்பில் இந்த மரங்கள் மலைப் பகுதிகளில் வளர்க்க முடியாது என்றும், மான் போன்ற வனவிலங்குகள் மேயாமல் பாதுகாப்பது மிக அவசியம் என்றும் குறிப்பிடப்பட்டு இருக்கிறது. இந்த மரம் மிகவும் விலை யுயர்ந்த மரம் என்றும், அமெரிக்கா போன்ற நாடுகளில் 55 சத விகிதம் மின்சாரம் தயாரிக்கவும் காகிதம் தயாரிக்கவும் இந்த மரம் மிகவும் பயன்படுவதாகச் சொல்லுகிறார்கள். அப்படிப்பட்ட ஒரு நல்ல மரத்தை மான் போன்ற பிராணிகள் இல்லாத மலைப் பகுதிகளில் மிக அதிகமான அளவில் வளர்ப்பதற்கு அரசு முன்வருமா? இந்த ''சுபாபுல்'' மரத்தை அதிக அளவில் அத்தகைய பகுதிகளில் பயிரிட வனத் துறை நடவடிக்கை எடுக்குமா என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விவரத்தைத்தான் விடையிலேயே தெரிவித்து இருக்கிறேன். இது அமெரிக்கா நாட்டிலே முதலில் தோற்றுவிக்கப்பட்டு, தென்கிழக்கு ஆசியாவில் பரவி, பின்னர் ஆப்பிரிக்க நாடுகளில் மிகப் பெரிய அளவில் பிரபலமடைந்து வரும் மரமாக தற்போது இருக்கிறது. இதனுடைய பயன்களைப் பார்க்கிறபோது வேளாண்மைத் துறையிலே, மற்றும் தொழில் துறையிலே மிகப் பெரிய புரட்சியை இந்த மரம் தோற்றுவிக்கும் வாய்ப்பு இருக்கிறது என்று இப்போது உலக நாடுகளிலே பரிசீலிக்கப்பட்டு வருகிறது. நான்கு ஆண்டுகளுக்குள் 65 அடி உயரத்திற்கு இந்த மரம்

வளர்வதாகத் தெரிவித்து இருக்கிறார்கள். ஆகவே, நம்முடைய கால்நடைகளுக்குத் தேவையான தீவனமாக சத்துக்கள் புரத சத்துக்கள், இதிலே அதிகமாக இருப்பதாகவும் தெரிவித்து இருக்கிறர்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததுபோல் பல்வேறு தொழில்களுக்கு பயன்படுகிற வகையில் இந்த மரம் இருக்கிறது என்றெல்லாம் தெரிவிக்கப்பட்டு இருக்கிறது. ஆனால் காடுகள் என்று நாம் உருவாக்கியிருக்கிற பகுதிகளில் மிருகங்களையும் மற்ற பிராணிகளையும் பாதுகாக்க வேண்டிய அவசியம் இருக்கிறது. ஆகவே தான் சமுதாயக் காடுகள் என்று எங்கே நாம் அமல்படுத்துகிறோமோ அந்தப் பகுதிகளில் மட்டும் இந்த மரத்தை வளர்ப்பதற்கு உத்தேசித்து இருக்கிறோம்.

திரு. செ. செம்மலை : தலைவரவர்களே, "மரப் பயிரும் பணப்பயிரே" என்ற வகையில் மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னதைப்போல இந்த சுபாபுல் மரங்களை கால்நடை தீவனமாகவும் பசுந்தாள் உரமாகவும் பயன்படுத்துவதோடு மட்டுமல்லாது நல்ல விறகு மற்றும் காகித ஆலைகளுக்கும் பயன்படும் மரங்களாக இருப்பதால் நம்முடைய வனத்துறை மூலம் விவசாயிகளுக்கு செடிகளை இலவசமாக கொடுத்து அதிக அளவில் பயிரிட நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, பாதுகாக்கப்பட்ட வனப்பகுதிகளில் வளர்க்க முடியாத சூழ்நிலை இருக்கும்போது தனியார், விவசாயிகள் இப்படிப்பட்டவர்களுடைய ஆதரவிலேதான் இந்த மரங்கள் வளர்க்கப்பட வேண்டிய அவசியம் இருக்கிறது. குறிப்பாக நம்முடைய சமுதாயக் காடுகள் வளர்ப்பு திட்டம் என்பதே கிராம மக்களுடைய உதவியைக் கொண்டு அவர்களுடைய துணையோடு வளர்க்கும் திட்டமாக இப்போது நிறைவேற்றப்பட்டுக் கொண்டிருக்கிறது. அதையொட்டி மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்தும் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ப. நெடுமாறன் : தலைவரவர்களே, இந்த சுபாபுல் அதிய மரத்தினுடைய ஏராளமான பயன்கள் என்ன என்பது இன்னும் சரியாக மக்களுக்குப் பிரச்சாரம் செய்யப்படவில்லை. மதுரை மாவட்டத்தில் ஏற்கெனவே 2 கோடி ரூபாய் திட்டத்தில் இதை சிறந்த முறையில் செய்து கொண்டு வருகிறார்கள். எல்லா தாலுக்காக்களிலும் இது நல்ல பயனை அளித்திருக்கிறது. ஆகவே, எல்லா மாவட்டங்களுக்கும் இத் திட்டத்தை விஸ்தரித்து, பிரச்சாரம் செய்து, விவசாயிகள் மத்தியில் எடுத்துச் சொல்ல தனியாக ஒரு துறையை அமைத்து இதைச் செய்வதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

1982 மார்ச் 2]

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, இது வனத்துறையின் மூலம் ஆராய்ந்து அறியப்பட்டு, வேளாண்மைத் துறைக்கும் தெரிவிக்கப்பட்டு வேளாண்மைத்துறை இதை கிராமங்களில் விவசாயிகளிடத்திலே பிரச்சாரம் செய்து வருகிறது. மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் இந்த மரத்தை பயிரிடும் திட்டத்தை மிகப் பெரிய அளவில் ஏற்றுக்கொண்டு அங்கே இத்திட்டத்தை விரிவாகச் செயல்படுத்தி வந்திருக்கிறார்கள். அதைப்போல தமிழ்நாடு முழுவதும் எல்லா மாவட்டங்களுக்கும் இந்த மரத்தை பற்றிய அவசியத்தையும், இதனால் விளையும் பயன்களைப் பற்றியும் எடுத்துச் சொல்லி மேலும், மேலும் இந்த மரங்களைப் பயிரிடுவதற்கு முக்கியத்துவம் அளித்து வேளாண்மைத் துறையும் வனத்துறையும் செயல்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. உ. சுப்பிரமணியன் : தலைவரவர்களே, சுபாபுல் என்ற அதிசய மரத்தின் பயன்களைப் பற்றி அமைச்சரவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். அண்மையில் சுவீடிஷ் சர்க்காரால் சுமார் 30 கோடி ரூபாய் தமிழ்நாட்டில் வனவளத்தைப் பெருக்க உதவித் தொகையாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். அந்தத் திட்டத்தின் கீழ் இந்த மரங்களை விரிவான அளவில் வளர்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, நான் முன்னாலே என்னுடைய பதிலில் சொல்லியிருக்கிறேன். அந்த சுவீடன் நாட்டு உதவியோடு ஆண்டுதோறும் 9 கோடி ரூபாய் திட்டத்தில் இப்போது இந்த சமுதாயக் காடுகள் வளர்க்கும் திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகிறது. அந்தத் திட்டத்தில் இந்த மரங்களை வளர்க்கும் திட்டம் பெரிய அளவில் இணைக்கப் பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தென்னாற்காடு மாவட்டத்திலுள்ள ''ஜாஹீர்'' காடுகள்

*வினா எண். 306—திரு. ஏ. சி. சண்முகம்: மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டத்திலுள்ள ''ஜாஹீர்'' காடுகளை அரசு எப்போது தன்வசம் எடுத்துக் கொண்டது?

(ஆ) இவ்வனப் பகுதிகளைப் பாதுகாக்க எடுக்கப் பெற்றுள்ள நடவடிக்கைகள் யாவை?